OS. 34/2022.

**நாள். 01.03.2024**

**பி.சா. 1 –** ராமதாஸ்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் முன்விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

பிரதிவாதிகள் தரப்பில் முன்விசாரணை தொடர்ச்சி

07.12.1915 ல் 1ம் பிரதிவாதியின் பாட்டன் முனியாண்டி சேர்வை கருப்பாயி அம்மாளிடம் கிரையம் பெற்ற பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.1. 07.06.1929 ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் தாத்தா வலம்புரியான் சேர்வை திருமலையாண்டி பிள்ளை மற்றும் திருமலைக்கரசு ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்ற பத்திரத்தின் அசல் பிசா.ஆ.2 ஆகவும், 14.06.1989 ல் என் தகப்பனார் எனக்கும் என் மகன் பாண்டியராஜனுக்கும் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் சாசன அசல் பி.சா.ஆ.3 ம் ஆகவும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 07.10.1997 ல் இறந்ததற்கான இறப்பு சான்று அசல் பி.சா.ஆ.4 ஆகவும், 10.11.1997 ல் இராமநாதபுரம் மண்டல துணை வட்டாச்சியர் வழங்கிய வாரிசு சான்று உண்மை நகல் பி.சா.ஆ.5 ஆகவும். 21.07.2006 ல் வழக்குசொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் பி.சா.ஆ.6 ஆகவும்., 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட குடிநீர் வரி ரசீதுகள் அசல் பி.சா.ஆ.7 ஆகவும், மின்கட்டண ரசீதுகள் அசல் பி.சா.ஆ.8 ஆகவும். அழகர் சாமி பெயரில் ஏற்பட்ட மின்கட்டண ரசீதுகள் அசல் பி.சா.ஆ.9 ஆகவும், அழகர் சாமி பெயரில் ஏற்பட்ட சொத்து வரி ரசீதுகள் பி.சா.ஆ.10 ஆகவும் வலம்புரி சேர்வை பெயரில் ஏற்பட்ட சொத்து வரி ரசீதுகள் பி.சா.ஆ.11 ஆகவும். எனது பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீதுகள் பி.சா.ஆ.12 ஆகவும் தாக்கல் செய்கிறேன். இவ்வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் பரிகாரம் வழங்கத்தக்கது அல்ல. வழக்கு தள்ளுபடியாகும் படி பிராத்திக்கிறேன்.